**O.S.No. 16/2024**

வா.சா.1, திரு.S.முருகன்
நாள் : 19.11.2025 நேரம் :12.35 AM

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1)முதல் வாதியின் தகப்பனார் பெயர் எனக்கு தெரியாது. இரண்டாம் வாதியின் தகப்பனார் பெயர் பஞ்சவர்ணம். எனது தகப்பனார் பெயர் சுப்பிரமணியன். எனது தகப்பனார் சுப்பிரமணியனின் தந்தை பெயர் ஆறுமுகதேவர். ஆறுமுகதேவரின் தகப்பனார் பெயார் முனியாண்டிதேவர். 4ம் வாதியின் தகப்பனார் பெயர் ராமர். ராமரின் தகப்பனார் பெயர் பாலுச்சாமி. மேற்படி நபர்களில் யார் முந்தைய வழக்கு நடத்தியது என்றால் ஆறுமுகதேவர், பஞ்சவர்ணம், முனியாண்டிதேவர் நடத்தினார்கள். மேற்படி மூவர் மட்டும் நடத்தினார்களா என்றால் இல்லை, கிராமத்தில் உள்ள வேறு சில நபர்களும் சேர்ந்து தான் முந்தைய வழக்கு நடத்தினார்கள், வேறு நபர்களின் பெயர் எனக்கு தெரியாது. எத்தனை பேர் சேர்ந்து நடத்தினார்கள் என்றாலும் எனக்கு தெரியாது. முந்தைய வழக்கு நடத்திய நபர்களிடமிருந்து ஆவணங்கள் பெற்று இந்த வழக்கில் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன்.

2)இந்த வழக்கில் எத்தனை பேருக்காக பிரதிநிதிகளாக தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சுமார் 50,60 நபர்களுக்கு பிரதிநிதிகளாக இந்த வழக்கில் தாக்கல் செய்திருக்கிறோம். நான் நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிப்பதற்கு வருவது மேற்படி 60 நபர்களுக்கு தெரியுமா என்றால் சுமார் 10, 15 நபர்களுக்கு தெரியும். இந்த சொத்து கிராமத்திற்கு பாத்தியப்பட்ட சொத்து இல்லை என்றால் சரிதான். சுமார் 1954 லிருந்து இந்த வாதிகள் பெயரில் உள்ள பட்டா அல்லது பிற அனுபவத்தை காட்டும் ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி 60 நபர்களும் வழக்கில் பாதகமகா ீதர்ப்பு ஏற்பட்டால் மேல் நடவடிக்கை எதுவும் எடுக்க மாட்டோம் என்று கூறியுள்ளார்களா என்றால் நீதிமன்றத்தில் அழைத்தால்

வருவதாக கூறியுள்ளார்கள். மேற்படி 60 நபர்களிடமும் முந்தைய வழக்கின் அசல் வழக்கு எண்.16/1954 தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை உள்ளதா என்றால் இல்லை, ஒரு குடும்பத்தாரிடம் மட்டும் தான் உள்ளது. பெரியசாமி தேவர் தலைமை ஏற்று நடத்தியதால் அவர் வாரிசிடம் தான் உள்ளது.

3)மேற்படி பெரியசாமி தேவரின் வாரிசுகளிடம் அசல் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை உள்ளதா என்றால் உள்ளது. மேற்படி பெரியசாமி தேவரின் வாரிசுகளிடம் 1954 லிருந்து 1972 வரை மற்றும் 1972 லிருந்து 1985 வரை மற்றும் இதுநாள் வரையிலான அவர்களது பெயரில் உரிமையோ, பாத்தியமோ காட்டுவதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் பெரியசாமி தேவர் கிரையம் பெற்றுள்ளார் , யாரிடமிருந்து கிரையம் பெற்றுள்ளார் என்றால் காசிம் வகையறாவிடமிருந்து கிரையம் பெற்றார். மேற்படி காசிம் தாவா சொத்தின் உரிமையாளர் என்றால் 1954 ன் தீர்ப்பின் படி ஒரு பாதிக்கு தான் உரிமையாளர். நான் காசிம் ராவுத்தாரிடமிருந்து எந்த கிரையம் பெறவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பட்டா,சிட்டா காசிம் ராவுத்தார், சிராஜீதின் பெயரிலும் சேர்ந்து தான் கூட்டு பட்டாவாக தான் உள்ளது என்றால் சரிதான்.

4)மேற்படி கூட்டுப்பட்டா காசிம் ராவுத்தார், சிராஜீதின் அனுமதி இல்லாமல் சட்டத்திற்கு புறம்பாக சில நபர்கள் பெயரும் சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி பட்டாவும் தற்போதைய உரிமையாளர்களின் அனுமதி இல்லாமல் மாற்றப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதி பழனிச்சாமிக்கு 2,3,4 பிரதிவாதிகள் உள்பட பல நபர்கள் எழுதி கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. 3 நபர்கள் தான் எழுதி கொடுத்துள்ளார்கள். 1ம் பிரதிவாதி பழனிச்சாமிக்கு ரைகான் சரிபா, அனஷ், ஆயிஷா பீவி, முகம்மது யூனுஷ், ைஹயினிசா சர்புதீன், சித்தி சுனைதா சேர்ந்து பவர் பத்திரம் எழுதி கொடுத்துள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியும். மேற்படி பவர் பத்திரத்தின் அடிப்படையில் பல நபர்களுக்கு கிரையம் கொடுத்துள்ள விபரமும் பிராதில் மறைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

5)மேற்படி நபர்களை இந்த வழக்கில் கட்சிக்காரர்களாக சேர்த்தால் எனக்கு

பாதகமாக அமையும் என்பதால் கட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண். 16/1954 ல் கண்ட மொத்த சொத்திற்கும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வழக்கில் உள்ள சொத்துகளில் ஒரு சொத்து இந்த வழக்கில் விடுபட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அசல் வழக்கு எண். 16/1954 ல் கண்ட தீர்ப்பின் படி வடபாதி மற்றும் தென்பாதி என பிரித்து பரிகாரம் கோரவில்லை என்றால் சரியல்ல. வழக்கு அசல் ஆவணங்கள் இல்லாமல் தாக்கல் செய்தால் பாதகமாக அமையும் என்று தெரியும் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கான உரிமை பத்திரங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி ஆவணங்கள் இருந்தும் உண்மை தெரிந்துவிடும் என்பதால் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

6)உரிமை ஆவணங்கள் தாக்கல் செய்யாமல் ரசீதுகளின் அடிப்படையில் தாக்கல் செய்துள்ளதால் பிராதில் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பிராதில் வாதிகள் உட்பட மற்ற நபர்களுக்காக தாக்கல் செய்துள்ள வழக்கில் எந்த நபர் எந்த சொத்தை அனுபவம் செய்து வருகிறார் என்பதை குறிப்பிடாததால் தாவா சொத்தில் எங்களுக்கோ, அனுபவம் செய்து வருவதாக சொல்லப்படும் நபர்களுக்கோ ஒரு போதும் பாத்தியம் இல்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ரசீதுகள் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.3 ஆவணமான பட்டாவின் முந்தைய ஆவணங்கள் உள்ளதா என்றால் உள்ளது. வா.சா.ஆ.3 ஆவணம் நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள சொத்துக்குரியது அல்ல என்றால் சரியல்ல.

7)மாரியப்ப கோனாரின் தகப்பனார் பெயர் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.3 ஆவணத்தில் சொத்தின் உரிமையாளர் சிராஜீதின், தாஜீதின் பெயர்கள் உள்ளது என்றால் காசிம் இறப்பிற்கு பின்னர் அவரது வாரிசுகள் பெயர் சேர்க்கப்பட்டுள்ளது. வா.சா.ஆ.4 ஆவணம் மோசடியாக உருவாக்கப்பட்ட அடங்கல் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 ஆவணம் பஞ்சவர்ணத்தின்

அனுபவத்தை குறிப்பிட்டு பொய்யாக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அதேபோல் வா.சா.ஆ.7 ஆவணத்திலும் வழக்கிற்கு சம்மந்தம் இல்லாத சொத்துகள் சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் வழக்கு தாக்கல் செய்வதற்காக மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்தின் நான்கு மால் பிராதில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து எனக்கு எந்த பாத்தியமோ, அனுபவமோ இல்லாததால் தான் நான் கோரியுள்ள பரிகாரங்கள் எங்களுக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றாலும், வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றாலும் சரியல்ல. தாவா சொத்துகள் அனைத்தும் 1954 லிருந்து இதுவரை உண்மை பாத்தியஸ்தர்களின் அனுபவத்தில் தான் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. உழவடை பாத்தியதாரர் என்ற அடிப்படையில் எங்களுக்கு சாதகமாக தீர்ப்பு ஏற்படவில்லை என்றாலும், அதனடிப்படையில் தாவா சொத்தை பாத்திய அனுபவம் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. மேற்படி தீர்ப்பில் கண்ட சொத்துகள் அனைத்தும் அடிபிடிதாங்கி கிராமத்தை சேர்ந்த சொத்துகள் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி பெற்ற ஆவணத்தின் படி இந்த வழக்கை மேலக்குளம் கிராமத்தில் இருப்பதாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கது அல்ல, தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

விசாரணை முடிவுற்ற நேரம்:01.15PM

APARNA JUDIT CHARLES

Digitally signed by APARNA JUDIT CHARLES
Date: 2025.11.19 14:30:42 +0530